**பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபை வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபை தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 01 இன் 53 ஆவது பந்தியின் பிரகாரம் நிதி கூற்றுகளின் அறிக்கை இடுதல் அனைத்து எண்ணிக்கையிலான தகவல்களுக்காக கடந்த காலப்பகுதியில் ஒப்பீட்ட ளவிலான தகவல்களை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், உரிமை மாற்றம் அடையும் கூற்று, ஆதனங்கள் பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள், அட்டுறு செலவுகள், விற்பனைகள் மற்றும் வருமானங்கள், விற்பனை செலவுகள் மற்றும் நிதி மற்றும் ஏனைய செலவுகள் குறித்தலுக்காக ஒப்பிட்ட ளவிலான பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாத வண்ணம் நீதிக்கூற்றை தயாரிக்குமாறு குறித்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | குறித்த நிதி அறிக்கை படுத்தல்கள் வரையறைக்கு இணங்க நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 3.5 மில்லியன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 80 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத பொறுப்புகளாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கம் நடைமுறை பொறுப்பு, நடைமுறை | குறித்த நிதி அறிக்கை படுத்தல்கள் வரையறைக்கு இணங்க நிதிக்கூற்று |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்படாமல் நடைமுறை பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அல்லாத பொறுப்புக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புகளாக அடையாளம் காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மன்னார் பேசினில் பெற்றோலிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டு தனியார் கம்பனியிடமிருந்து அதிகார சபை கொள்வனவு செய்திருந்த ரூபா 926.5 மில்லியன் பெறுமதியான தரவுகளை நிதி நிலைமை கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் தரவுகள் கொள்வனவு காட்டப்பட்டிருந்ததுடன், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 127 (இ) பந்தியின் பிரகாரம் தேவையான விபரமான தரவுகள் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாத சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள தரவுகள் கொள்வனவு செய்யப்படுதல் ரூபா 926,500,000 தொடர்பாக 2023 ஆம் வருட நிதி கூற்றின் ஊடாக SLPSAS 01 என் 27 ஆவது பிரிவுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | குறித்த நிதி அறிக்கை படுத்தல்கள் வரையறைக்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 என் 132 (சி) பந்தியின் பிரகாரம் நிதி கூற்றை புரிந்து கொள்வதற்கு உரியவரான ஏனைய கணக்கிட்டு கொள்கைகளை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கு கொள்கைகள் நிதி கூற்றுக்களினுள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால கணக்கிட்டு கூற்றுக்களினுள் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்த நிதி அறிக்கை வரையறைக்கு இணங்க ஈடுபடுத்தப்பட்ட கணக்கிட்டு கொள்கைகள் நிதி கூற்றுக்களினுள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய வருடத்திற்குரிய ரூபா 9.7 மில்லியன் ஆன உபகரண அன்பளிப்பு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் அடையாளம் காணப்படாமை, அதிகார சபையினால் பேணப்பட்டு வரும் வாடகை கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 3.6 மில்லியனான மீண்டும் கிடைக்கப்பெற வேண்டிய வைப்புத் தொகை கணக்கிடப்படாமை மற்றும் முன்னைய வருடத்திற்குரிய ரூபா 2.05 மில்லியனான அட்டுறு செலவுகள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47ஆவது பந்தியின் பிரகாரம் ஒப்பீட்டு மதிப்புகளை மறுபரிசீலனை செய்வதன் மூலம் மீண்டும் வெளிப்படுத்தளின் ஊடாக சரி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திக்கு சரி செய்யப்பட்டது. மேலும், நியமத்தின் 54வது பத்தியின்படி | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நடக்காத வகையில் நிதிக்கூற்றுக்ளை தயார் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. | முந்தைய காலப் பிழைகள் தொடர்புடைய நிதி அறிக்கை கட்டமைப்பின்படி சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | | |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 44 ஆவது பந்தியின் பிரகாரம் பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்ற மொத்த வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும், நடப்பாண்டின் பொது திறைசேரியிடமிருந்து நன்கொடையாக கிடைக்க பெற்றுள்ள ரூபா 73.8 மில்லியன் மீளாய் வாண்டின் வருமானமாக விபரமான வருமானங்கள் கூற்றினுள் அடையாளம் காணப்படாமல் உரிமை மாற்றங்கள் கூற்றின் ஊடாக அரசின் நன்கொடையாக நேரடியாக தேறிய சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய் வாண்டின் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 73.8 மில்லியன் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | நடப்பாண்டின் பொது திறைசேரிடமிருந்து கிடைக்கப் பெற்ற அவ்வாறான பணத்தை மீளாய் லாண்டின் வருமானமாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்த கணக்கிட்டு நியமத்துக்கு இணங்க வருமானம் அடையாளம் காணப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் 16ஆம் பந்தியின் பிரகாரம் நிதி கூற்றுடன் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் மீளாய்வாண்டில் நிதி கூற்றுக்களின் பிரதான முகாமைத்துவ தரப்பினரின் ஊதியங்கள் தொடர்பான தேவையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 14 இன் பிரகாரம் நிதி கூற்றுக்கள் தொடர்புடைய தரப்பினர்களோடு (பணிப்பாளர் சபை) எவ்வித கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடுத்தி இருக்கவில்லை. | குறித்த நிதி கூற்று அறிக்கையிடல் நியமம் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 இன் 21 ஆம் இலக்க பெற்றோலிய வள கட்டளை சட்டத்தின் 35(3) ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து நிதியாண்டின் இறுதியிலும் பெற்றோலிய வள அபிவிருத்தி நிதியத்தில் பேணப்பட்டு வருகின்ற பணத்திலிருந்து நூற்றுக்கு 10 சதவீதத்துக்கு சமமான அளவு ஒன்றிணைந்த நிதியத்துக்காக செலுத்தப்பட வேண்டும். அதன் பிரகாரம் மீளாய் வாண்டுக்காக 2023 பிப்ரவரி 14 ஆம் திகதி திறைசேரிக்கு செலுத்தப்பட்ட அமெரிக்க டாலர் 60,257.18 இதற்கு சமமான ரூபா 22 | இதற்குப் பின்னர் டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்கு ஒன்றிணைந்த நிதியத்துக்கு செலுத்தப்பட வேண்டிய அளவை அட்டுறு செலவு ஒன்றாக குறிப்பிடுவதற்கு குறித்த அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக. | அதிகார சட்டத்தின் பிரகாரம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் மீளாய்வாண்டில் செலவொன்றாக அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஊழியர் காப்பறுதி மற்றும் வாகன காப்புறுதிகளுக்குரிய முன் கொண்டுவரப்பட்ட ரூபா 176,049 ஆன காப்புறுதி செலவுகள் மீலாய் வாண்டின் செலவுகளாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2022 வருடத்திற்கு உரித்தான அடுத்த வருடத்துக்காக செலுத்தப்பட்டிருந்த ஊழியர் சபை காப்புறுதி பணம் மற்றும் மோட்டார் வாகன காப்புறுதி பணம் 2023 ஆம் வருட கணக்குகளில் சீர் செய்யப்பட்டுள்ளது. | எதிர்வரும் கொடுப்பனவுகளை சரியாக கணக்கிட்டு கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 11.7 மில்லியன் ஆன விளம்பர செலவு மீளாய்வாண்டின் செலவொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவை மிஞ்சிய அந்த வருமானம் அந்த அளவில் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | விற்பனை செலவுகள் இதற்கு பிறகு குறித்த செலவுகள் குறித்த காலத்தினுள் அடையாளம் கண்டு கணக்கிடுவதற்கு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | குறித்த காலத்தில் கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் தரவுகள் முகாமைத்துவ கட்டணமாக அடையாளம் காணப்பட வேண்டிய ரூபா 5.1 மில்லியனுக்கு பதிலாக ரூபா 3.7 மில்லியன் கணக்கிடப்பட்டதன் காரணமாக நடப்பு ஆண்டின் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 1.4 மில்லியனினால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த செலவு அதிகார சபையின் பிரதான வியாபார நடவடிக்கைக்காக செலவிடப்பட் செலவொன்றாக மொத்த இலாப கணிப்பீடு செய்வதற்காக சீர் செய்யப்பட வேண்டிய போதிலும், விபரமான வருமானங்கள் கூற்றில் நிர்வாக செலவாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவு 2021 மற்றும் 2022 வருடங்களுக்குரியதாகும். | குறித்த செலவுகள் சரியாக பொருத்தமான, இடத்தில் கணக்கிடப்பட வேண்டும். |
| (உ) | வெளிநாட்டு கம்பனி ஒன்று மற்றும் இலங்கை அரசு இடையிலான 2019 மே 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புவியியல் ஆராய்ச்சி சேவை (Geophysical Exploration Service) ஒப்பந்தத்தின் பிரகாரம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்காக தரவுகள் அனுமதிப்பத்திர பரிமாற்றல் வருமானத்திலிருந்து இலங்கை | எதிர்காலத்தில் அவ்வாறான வருமானங்கள் குறித்த வருடத்திற்குள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய வருமானங்கள் சரியாக வருடத்திற்கு உரிய கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

அரசுக்கு உரித்தாக்க வேண்டிய பகுதியான அமெரிக்க டாலர் 683,975.75 அவ்வாறெனில் ரூபா 222.2 மில்லியன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய வருமானமாக கணக்கிடப்படாமல் மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றாக கணக்கிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவை மிஞ்சிய வருமானம் அந்த அளவில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 பொது முயற்சிகள் சுற்றறிக்கை - செயற்பாட்டுக் கையேடு - பிரிவு 2.3 | தனது நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்த செயல்முறை கையேடு மற்றும் நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கான செயல்முறை கையேடு தயாரிக்கப்பட்டு,பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு, அவ்வப்போது மதிப்பாய்வு செய்து புதுப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், அவ்வாறு செய்யவில்லை. | 2.3 பிரிவு - சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அதிகார சபையின் சுற்று நிருப ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 131,654,824 மிகையாக இருந்ததுடன் 2021 ஒக்டோபர் 08ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த 03 மாதங்களுக்கான பற்றாக்குறை ரூபா 9,342,693 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்னார் பேசினில் பெட்ரோலிய ஆராய்ச்சி தரவுகளை கொள்வனவு செய்வதற்காக பொது திறைசேரியிடமிருந்து 2006 ஆம் வருடத்தில் அதிகார சபைக்கு வழங்கி இருந்த ரூபா 926 மில்லியன் கடன் தொகையில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 238 மில்லியன் காணப்பட்டது. 2022 ஜூன் 01ஆம் திகதிய திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் TO/REV/SL/2/91 ஆம் இலக்கமுடைய கடிதத்தின் பிரகாரம் அதிகார சபை அதன் வருடாந்த வருமானத்தில் நூற்றுக்கு 10 சதவீதமான அளவை வருடாந்தம் செலுத்துவதற்கு இணங்கி இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிலே ரூபா 22,342,689 ஐ பொது திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், செலுத்தப்பட்டிருப்பது ரூபா 5,652,180 மாத்திரமே ஆகும். | 2022 ஆம் வருடத்தில் கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து திறைசேரி திணைக்களத்துக்கு அனுப்பப்பட வேண்டிய எஞ்சிய தொகையை நடைபாண்டிலே அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இணங்கியதன் பிரகாரம் அதிகார சபையினால் அதன் வருடாந்த வருமானத்திலிருந்து நூற்றுக்கு 10 அளவை பொது திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். |